மாலை பதிப்பு
# சுபீட்சம்
நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள
supeedsam.com

30.08.2022 செவ்வாய்க்கிழமை supeedsam.com supeedsam@gmail.com

# இடைக்கால வரவு செலவுத்திட்டத்தில் புதிய முன் மொழிவுகள்



## தட்டுப்பாடின்றி எரிவாயு விநியோகம்

## கடற்றொழிலாளர்களுக்கு மானியம்

## ஓய்வு வயது 60 ஆக குறைப்பு

## மாதாந்தம் 10 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவு

## மின்சார வாகனங்கள் மட்டுமே இறக்குமதி

## சமுர்த்தி உதவி பெறும் குடும்பங்களுக்கு நிவாரணம்

## சாதாரண தர பரீட்சை பெறுபேறுகள் விரைவில்

கடந்த வருடத்திற்கு அமைவாக நடைபெற்ற கல்வி பொதுத்தராதார சாதாரண தர பரீட்சையின் பெறுபேறுகள் நவம்பர் அல்லது டிசம்பர் மாதத்தில் வெளியிடக்கூடியதாக இருக்கும் என்றுபரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எல்.எம்.டி தர்மசேன தெரிவித்துள்ளார். பரீட்சை திணைக்களத்தில் நேற்று (29) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் இதுதொடர்பாக மேலும் தெரிவிக்கையில், பரீட்சையின் செயல்முறை பரீட்சை அடுத்த மாதம் 15ஆம் திகதி ஆரம்பமாகும். சாதாரண தர பரீட்சை கடந்த மே மாதம் 23ஆம் திகதி முதல் ஜூன் மாதம் முதலாம் திகதி வரை இடம்பெற்றது. இம்முறை உயர்தர பரீட்சைக்கு தோற்றிய மொத்த விண்ணப்பதாரிகளில் பத்தாயிரம் பேர் மூன்று பாடங்களிலும் ஏ சித்தியை பெற்றிருப்பதாக, பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சுட்டிக்காட்டினார். இது மொத்த மாணவர்களில் மூன்று தசம் ஆறு–ஏழு வீதமாகும். மூன்று ஏ சித்திகளையும் பெற்றவர்களில் ஒன்பதாயிரத்து 313 பேர் பாடசாலை பரீட்சார்த்திகள் ஆவர்.

## பஸ் விபத்தில் 26 பேருக்கு காயம்



**தலவாக்கலை பி.கேதீஸ்**

வலப்பனை மஹ ஊவா பிரதேசத்தில் தனியார் பேருந்து ஒன்று நேற்று (30) வீதியில் குடைசாய்ந்து விபத்துக்குள்ளானதில் 26 பேர் காயமடைந்த நிலையில் வலப்பனை மற்றும் ரிகலகஸ்கட வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வலப்பனை பொலிஸார் தெரிவித்தனர். மட்டக்களப்பிலிருந்து திருமண வைபவம் ஒன்றில் கலந்து கொள்ள உடப்புஸ்ஸல்லாவ பகுதிக்கு சென்றிருந்த பேருந்து ஒன்றே மீண்டும் மட்டக்களப்பிற்கு திரும்பிசெல்லும் வழியில் விபத்துக்குள்ளாகியுள்ளதாக ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. இந்த விபத்தில் 26 பேர் சிறுகாயங்களுக்குள்ளான நிலையில் வலப்பனை மற்றும் ரிகலகஸ்கட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். பேருந்தின் தடை இயங்காமையே இவ்விபத்துக்கு காரணமென தெரிவித்த வலப்பனை பொலிஸார் இவ்விபத்து தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்

## அனைத்து கட்சிகளையும் உள்ளடங்கிய தேசிய சபையை அமைக்க சட்டமூலம்

பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து கட்சிகளையும் உள்ளடங்கியதேசியசபை ஒன்றைஅமைப்பதற்கான நகல் சட்டமூல வரைவுக்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. பிரதமர் தினேஷ் குணவர்த்தன , இதுதெடர்பான நகல் சட்டமூலத்தை கட்சித்தலைவர்களிடம் முன்வைத்துள்ளார். பாராளுமன்ற கட்டடத்தொகுதியில் நேற்று இடம்பெற்ற கட்சித்தலைவர்களின் கூட்டத்தில் இது சமர்ப்பிக்கப்பட்டது. பாராளுமன்றத்தின் துறைசார் கண்காணிப்பு நிறைவேற்றுக்குழுக்களை அமைப்பது தொடர்பில் அரசாங்கம் முன்வைத்துள்ள யோசனை குறித்தும் அங்கு கலந்துரையாடப்பட்டது. இதன்போது கட்சித்தலைவர்கள் பல்வேறு கருத்துக்களை முன்வைத்தனர். பாராளுமன்றத்தில் கட்சிகளின் பொது இணக்கப்பாட்டுடன் கொள்கையளவிலான தீர்மானங்களை மேற்கொள்வதற்கு வழிகாட்டுவது இந்த தேசிய சபையின் நோக்கமாக இருக்க வேண்டும் என கட்சித்தலைவர்கள் குறிப்பிட்டனர்.

## அமைச்சுப் பதவியை ஏற்க தயார் ஜனாதிபதிக்கு அறிவித்தார் தம்மிக்க

பொருளாதார அபிவிருத்தி தொடர்பான அமைச்சுப் பதவியை பொறுப்பேற்க தான் தயாராக இருப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் தம்மிக பெரேரா தெரிவித்துள்ளார். இது தொடர்பில் தான் ஜனாதிபதிக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் கலந்துகொண்ட போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

## பல்கலை அனுமதிக்கான விண்ணப்பங்கள் ஐந்தாம் தேதி ஆரம்பம்

**( காரைதீவு நிருபர் சகா)**

இவ்வாரம் வெளியான 2021 ஆம் ஆண்டு க.பொ.த.உயர்தரப்பரீட்சை முடிவுகளின்படி, பல்கலைக்கழக அனுமதிக்காக விண்ணப்பிக்கும் காலம் எதிர்வரும் செப்டம்பர் 05 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகிறது. இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு இதனை விஷேட அறிவித்தலாக அறிவித்துள்ளது.

அதற்கு முன்னோடியாக விண்ணப்பிப்பதற்கான மாணவர் கையேடு எதிர்வரும் வெள்ளிக்கிழமை(2) வெளியிடப்படுகிறது. எதிர்வரும் சனிக்கிழமை(3) முதல் கையேடுகளை கடைகளில் பெற்றுக் கொள்ளலாம். தேவை ஏற்பட்டால் இணையதளத்தில் இருந்தும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். ஒரு கையேடு ஆயிரம் ரூபாய் ஆகும். பல்கலைக்கழக விண்ணப்பங்களை செப்டம்பர் ஐந்தாம் தேதி திங்கட்கிழமை முதல் நிகழ்நிலை மூலம் விண்ணப்பிக்க முடியும். நிகழ் நிலையாக ஐந்தாம் தேதி முதல் மூன்று வாரங்களில் பல்கலைக்கழக அனுமதிக்காக விண்ணப்பிக்கலாம். விண்ணப்பிப்பதற்கான இறுதித் திகதி செப்டம்பர் 23ஆம் திகதி ஆகும். இம்முறை மருத்துவத் துறைக்கு 2035 மாணவர்களும் பொறியியல் துறைக்கு 2238 மாணவர்களும் தெரிவு செய்யப்பட இருக்கின்றார்கள் என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

## இலங்கையின் ஏனைய கடன் வழங்குநர்களை ஒன்றிணைக்க ஜப்பான் தயார்

இலங்கைக்கு கடன் வழங்கிய அனைத்து நாடுகளும் ஒன்றிணைந்து இலங்கை எதிர்நோக்கும் கடன் நெருக்கடி தொடர்பில் கலந்துரையாடுவது முக்கியமானது என ஜப்பான் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக ஜப்பான் மற்ற நாடுகளுடன் ஒருங்கிணைந்து செயல்பட்டு வருவதாக ஜப்பான் நிதி அமைச்சர் தெரிவித்தார்.

## இலங்கைக்கான பயணத்தடையை நீக்கிய இரு நாடுகள்

இலங்கைக்கான பயண ஆலோசனைகளை தளர்த்திய நாடுகளின் பட்டியலில் ஸ்வீடன் மற்றும் டென்மார்க் ஆகிய நாடுகளும் இணைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. சுற்றுலாத்துறை எதிர்பார்த்ததை விட சிறந்த மீட்சிக்கான அறிகுறிகளைக் காணும் வாய்ப்புகளை மேலும் அதிகரிக்க இரு நாடுகளும் நேற்று இந்த அறிவிப்பை வெளியிட்டிருந்தன.

# இடைக்கால வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகள்

பொருளாதார மேம்பாட்டுக்காக பல்வேறு மறுசீரமைப்புக்கள் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில், அவற்றுக்கமைய பொருளாதார வளர்ச்சி வேகத்தை 5 சதவீதத்தினால் அதிகரிக்க முடியும் என எதிர்பார்த்துள்ளோம்.

பொருளாதார நெருக்கடிகளால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு ஏற்கனவே உறுதியளிக்கப்பட்டவாறு நிவாரணங்கள் வழங்கப்படும்

அரச வருமானத்தை அதிகரிப்பதற்கான புதிய வேலைத்திட்டங்களை 2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவு திட்டத்தை இலக்காகக் கொண்டு முன்வைக்கவுள்ளோம். அரச வருமானம் அதிகரிக்கும் போது பணத்தை அச்சிட வேண்டிய தேவை படிப்படியாகக் குறைவடையும்.

இடைக்கால வரவு செலவுத் திட்டத்திற்கமைய 18 வயதுக்கு மேற்பட்ட ஒவ்வொருவரும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் பதிவு செய்யுமாறு முன்மொழியப்படுகிறது.

சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சு வார்த்தைகள் வெற்றிகரமாக நிறைவடைந்து வருகின்றன.

வட் வரி செப்டம்பர் முதலாம் திகதி முதல் 12 வீதத்தில் இருந்து 15 வீதமாக அதிகரிக்கப்படும்.

அரச உத்தியோகத்தர்கள் ஓய்வுபெறும் வயதெல்லை 60 ஆகக் குறைக்கப்படும்.

எதிர்காலத்தில் அரச சேவைக்காக இலத்திரனியல் வாகனங்களை மாத்திரம் பயன்படுத்துவதற்கான நடவடிக்கை படிப்படியாக முன்னெடுக்கப்படும். தனியார் துறைகளையும் இதனை பின்பற்றுவதற்கு பரிந்துரைக்கப்படுகிறது.

இலங்கை மின்சாரசபை, பெற்றோலியக் கூட்டுத்தாபனம், ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் தவிர 50 அரச நிறுவனங்களை மறுசீரமைப்பது தொடர்பில் ஆராயப்பட்டு வருகிறது.

நட்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களின் மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்காக அரச நிறுவன மறுசீரமைப்பு பிரிவை அமைக்க 200 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு

மத்திய வங்கி மற்றும் பணம் அச்சிடுதல் குறித்து புதிய சட்டம் அமுல்படுத்த நடவடிக்கை.

பொருளாதார நெருக்கடிகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எதிர்வரும் 4 மாதங்களுக்கு மாதாந்தம் 10,000 ரூபா நிவாரண கொடுப்பனவு வழங்கப்படும்.

மண்ணெண்ணெய் விலை உயர்வினால் பாதிக்கப்பட்டுள்ள மீனவர்கள், பெருந்தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு விரைவில் நிவாரணம்.

சமுர்த்தி பெறுனர்கள் , முதியோர் கொடுப்பனவைப் பெறுபவர்கள் மற்றும் நாட்பட்ட நோய்களுக்கான கொடுப்பனவை பெறுபவர்களுக்கு வழங்கப்படும் மாதாந்த கொடுப்பனவு அதிகரிக்கப்படும்.

பெரும்போகத்தின் போது உரத்தின் விலை குறைவடையும்.

நாட்டில் சுமார் 61,000 குடும்பங்கள் உணவு பாதுகாப்பின்றி உள்ளன. அவற்றுக்கு சர்வதேச நிதியுதவியுடன் நிவாரணங்கள் வழங்கப்படும்.

விவசாயத் துறையில் நிலுவையிலுள்ள கடன்களை தள்ளுபடி செய்ய 350 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு.

அரச துறையில் பணிபுரியும் 60 வயதுக்கு மேற்பட்ட அனைத்து ஊழியர்களும் எதிர்வரும் டிசம்பர் 31 ஆம் திகதியன்று ஓய்வுபெற வேண்டும்.

கர்ப்பிணிகளுக்கு தற்போது வழங்கப்படும் கொடுப்பனவிற்கு மேலதிகமாக மேலும் 2500 ரூபாவை வழங்கத் தீர்மானம்.

எரிவாயு கையிருப்பினை உறுதிப்படுத்த அதன் இறக்குமதிக்காக 70 மில்லியன் டொலர் ஒதுக்கப்படும்.

கொவிட் தொற்றினால் தொழிலை இழந்தவர்களுக்கு புதிய தொழில் வாய்ப்புக்களுக்கான பயிற்சியை வழங்க 200 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

மலைநாட்டு பகுதிகளிலிருந்து கொழும்பு உள்ளிட்ட நகர்ப்புறங்களுக்கு புகையிரதத்தின் ஊடாக மரக்கறிகளை கொண்டு செல்வதற்கான செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் கிளையொன்றை குருநாகலில் நிறுவுவதற்கு முன்மொழியப்படுகிறது.

வெளிநாட்டு பல்கலைக்கழகங்கள் இலங்கையில் அவற்றின் கிளைகளை திறப்பதை ஊக்குவிக்கும் வகையில் சட்ட ஒழுங்குமுறைகளை திருத்தியமைக்க நடவடிக்கை.

நாட்டை மீளக்கட்டியெழுப்புவதற்காக சர்வகட்சி அரசாங்கத்தில் இணைந்து கொள்ளுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளிடமும் மீண்டும் கோரிக்கை விடுத்துள்ளார்.

# மட்டக்களப்பு மாவட்டத்தில் “தேனகபோஷா” சத்துமா அறிமுகம்



**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

மட்டக்களப்பு மாவட்டத்தில் குறைபோசாக்குடையவர்களின் ஊட்டச்சத்தினை மேம்படுத்துவதற்காக “தேனகபோஷா” சத்துமா நேற்று (29) திகதி மட்டக்களப்பில் அறிமுகம் செய்துவைக்கப்பட்டுள்ளது. மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் இன்று இடம்பெற்ற குறித்த நிகழ்வினை பிராந்திய சுகாதார பணிப்பாளர் வைத்தியகலாநிதி குணசிங்கம் சுகுணன் ஏற்பாடு செய்திருந்ததுடன், மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் தலைமைதாங்கி நடாத்தியுள்ளார்.

குறித்த அறிமுக விழாவின் போது, சிறுவர்கள், கர்ப்பிணித்தாய்மார்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களின் போசாக்கின்மையை சீர்செய்வதற்காக உடனடியாக வழங்குவதற்காக சத்துமா திட்டம் மாவட்ட மட்டத்தில் அமுள்ப்படுத்தப்படவுள்ள நிலையில், இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக பிரதேச மட்டத்தில் உள்ள அரச அரச சார்பற்ற மற்றும் ஏனைய துறைசார் நிறுவனங்களின் பங்களிப்பினை பெற்றுக்கொள்வதன் ஊடாக இத்திட்டத்தினை சிறப்பாக நடாத்திச் செல்லலாம் என்பதன் அவசியம் தொடர்பில் முக்கிய கவனம் செலுத்தி கலந்துரையாடப்பட்டுள்ளது.

தற்போதைய சூழ்நிலையில் 2–5 வயதுடைய சிறுவர்களிடம் ஊட்டச்சத்து குறைபாடு காரணமாக அவர்களின் வளர்ச்சி வீதத்தில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதை அவதானிக்க கூடியதாக இருப்பதாக வைத்திய நிபுணர்கள் கருத்து தெரிவித்ததன் அடிப்படையில் குறித்த திட்டம் நடைமுறைப்படத்தப்படவுள்ளதுடன், இன்றைய சிறார்கள் நாளைய தலைவர்கள் அவர்களினுடைய உடல் உளரீதியான வளர்ச்சியினை மேம்படுத்துவதற்கு ஊட்டச்சத்து மிக்க உணவுகள் அவசியம் என்பது இங்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து நிறைந்த சத்துமாவினை துரிதகதியில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதா அதிகாரிகள் தெரிவித்துள்ளதுடன், இதன் போது பொது சுகாதார பரிசோதகர் அலுவலகம் மற்றும் பிரதேச செயலகங்களினுடாக சத்துணவு வழங்கல் தொடர்பாக அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவங்களில் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இக் கலந்துரையாடலில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி.சுதர்சனி ஸ்ரீகாந்த், பிராந்திய சுகாதார பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஜீ.சுகுணன், சுகாதார வைத்திய அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், உதவி பிரதேச செயலாளர்கள், வலய கல்வி பணிப்பாளர்கள், உதவி வலயக் கல்விப் பணிப்பாளர்கள், சுகாதார வைத்திய அதிகாரிகள், அரச சார்பற்ற நிறுவன தலைவர்கள், துறைசார் திணைக்களங்களின் உயர் அதிகாரிகள் என பலரும் இதன்போது கலந்துகொண்டுள்ளனர்.

# வரலாற்று சாதனையை நிலைநாட்டிய முனைக்காடு தேசிய பாடசாலை மாணவிகள்

மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திற்குட்பட்ட முனைக்காடு விவேகானந்த மகா வித்தியாலய தேசிய பாடசாலையில் உயர்தரம் கற்ற இரு மாணவிகள், வெளியாகி உள்ள உயர்தர பெறுபேற்றின் அடிப்படையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் கலைப்பிரிவில் 2ம், 4ம் நிலைகளை பெற்று வரலாற்று சாதனையை நிலை நாட்டி உள்ளனர். அ. அஜந்தினி 2ம் நிலையையும் கௌசிகா 4ம் நிலையையும் பெற்றுள்ளதுடன், மாவட்டத்தில் 100க்கும் குறைவான நிலையை 5மாணவர்கள் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# களுதாவளை மகா வித்தியாலயம் தேசிய பாடசாலையில் 160 மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு விண்ணப்பிக்க தகுதி

**(ரக்ஸனா)**

மட்.பட்.களுதாவளை மகாவித்தியாலயம் தேசிய பாடசாலையில் 160 மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு விண்ணப்பிக்க தகுதிபெற்றுள்ளனர். தற்போது வெளியாகியுள்ள க.பொ.த(உ.தர)ப் பரீட்சை 2021(2022) முடிவுகளின்படி மட்.பட்.களுதாவளை மகாவித்தியாலயம் தேசிய பாடசாலையில் பரீட்சைக்கு தோற்றிய 209 மாணவர்களில் 160 மாணவர்கள் பல்கலைக் கழகத்திற்கு விண்ணப்பிக்க தகுதிபெற்றுள்ளதாக பாடசாலைவட்டாரங்கள்தெரிவிக்கின்றன.

அந்த வகையில் விஞ்ஞானப்பிரிவில் 17 மாணவர்களும், வர்த்தகப்பிரிவில் 19 மாணவர்களும், கலைப்பிரிவில் 62 மாணவர்களும், பொறியியல் தொழிநுட்பப்பிரிவில் 30 மாணவர்களும், உயிர்முறைமைகள் தொழிநுட்பப்பிரிவில் 32 மாணவர்களும் அடங்குகின்றன. இதில் பொறியியல் பீடத்திற்கு தங்கவடிவேல் மிருணா மூன்று பாடங்களிலும் ஏ தரச் சித்தியினைப் பெற்று மாவட்ட மட்டத்தில் 3 ஆம் நிலையினையும், சதீஸ்பிரதாஸ் திகாஜினி உயிர்முறைமைகள் தொழிநுட்பப் பிரிவில் 2ஏ பி யினைப் பெற்று மாவட்ட மட்டத்தில் 2 ஆம் நிலையினையும் பெற்று பாடசாலைக்கும் பெற்றோருக்கும் பெருமையினைத் சேர்த்துள்ளனர். மாணவர்களைப் பயிற்றுவித்து ஊக்கப்படுத்திய அதிபர், பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள் கல்விசாரா ஊழியர்கள், பெற்றோர் மற்றும் சித்தி பெற்ற மாணவர்களுக்கு பழைய மாணவர் சங்கம், பெற்றோர்கள், கல்விச் சமூகம் தமது வாழ்த்துகளையும், பாராட்டுக்களையும் தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய
வருடாந்த மகோற்சவம் - 2022



கல் நந்தி புல்லுண்டு
வெள்ளையரை துரத்தியடித்த
தான்தோன்றீஸ்வரர் மகிமை காண வாரீர்!
கொடியேற்றம் : 29.08.2022
தேரோட்டம் : 11.09.2022
விளம்பர அனுசரணையாளர் மு.அருட்செல்வம் (மகிழடித்தீவு)

# கல்முனை பற்றிமாவில் 5 மருத்துவம் 8, பொறியியல் துறை மாணவர் தேர்வு

**( காரைதீவு நிருபர் சகா)**

கிழக்கின் புகழ் பூத்த கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய பாடசாலையில் இம்முறை வெளியான கபொத உயர்தர பரீட்சை முடிவின்படி, 5 மாணவர்கள் மருத்துவத் துறைக்கும் ,எட்டு மாணவர்கள் பொறியியல் துறைக்கும் தேர்வு செய்யப்பட்டிருக்கின்றார்கள் என கல்லூரி அதிபர் வண.சகோ. சந்தியாகு தெரிவித்தார். மருத்துவத் துறையில் செல்வராஜா ரொஷியா ,லிங்கமூர்த்தி மிதுர்ஷியா ஆகியோர் மூன்று ஏ சித்திகளையும் ,கோகிலன் சஞ்சித் இரண்டு ஏ ஒரு சில சித்தியும், சந்திரகுமார் ஹிரோபிகா, திருச்செல்வம் பெரதிஷ்ரா, ஆகியோர் இரண்டு ஏபி சித்திகளையும்பெற்று மருத்துவ துறைக்கு தெரிவாகி இருக்கின்றார்கள். பொறியியல் துறையில் கிருஷ்ணகுமார் முகேஷ்ராம், சுரேஷ்காந்த் ஆர்னோல்ட் எரிக்ஸ்மன், தம்பி ஐயா ஹரிஷ்ராஜ் ,சண்முகநாதன் சர்வஜன் ஆகியோர் 3ஏ சித்திகளைபெற்றுள்ளனர். அதேபோல மோகன் கிருஷோத், அண்றிசனூன் டென்னிஸ், திருச்செல்வம் கோபுராஜ், பரமேஸ்வரன் திபுசாந் ஆகியோர் ஏ2 பி சித்திகளை பெற்று பொறியியல் துறைக்கு தேர்வாகியுள்ளனர்.

# 30வது நாள் மட்டக்களப்பில்




**க.ருத்திரன்**

'இலங்கையின் வடக்கு கிழக்கு மக்களுக்கு கௌரவமான உரிமையுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும்' என்ற தொனிப் பொருளிலான கவனயீர்ப்பு போராட்டம் மட்டக்களப்பு தன்னாமுனை வீதி செங்கலடியில் இன்று (30) நடைபெற்றது. வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் நெறிப்படுத்துனர் கண்டுமணி லவகுசராசா தலைமையில் வடக்கு கிழக்கில் உள்ள மாவட்டங்கள் அனைத்திலும் சுழற்சி முறையில் 100 நாட்கள் செயல் முனைவு போராட்டமானது மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன் 30 ஆவது நாள் செயல் முனைவான போராட்டமானது மட்டக்களப்பு மாவட்டத்தின் தன்னாமுனையில் நடைபெற்றது. மட்டக்களப்பு கொழும்பு பிரதான வீதியில் ஒன்று கூடிய மக்கள் தங்களது பிரதேசத்தில் இடம்பெறும் பல்வேறுபட்ட பிரச்சினைள் தொடர்பாக கோஷங்களை எழுப்பியவாறும் காணமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி வேண்டியும் பல்வேறுபட்ட விடயங்கள் தொடர்பாக அரசின் கவனத்திற்கு கொண்டு வருமாறு தெரிவித்து கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். கோரிக்கை அடங்கிய பதாதைகளை கையில் ஏந்தியவாறும் கோஷங்களை எழுப்பி கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

'நடமாடுவது எங்கள் சுதந்திரம் ஒன்று கூடுவது எங்கள சுதந்திரம்', 'பேச்சு சுதந்திரம் எங்கள் உரிமை', 'வேண்டும் வேண்டும் வடக்கு கிழக்கு மக்களுக்கு அரசியல் தீர்வு வேண்டும்' என்பன போன்ற கோஷங்களை எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டனர். இதில் சிவில் அமைப்புக்கள் இளைஞர் யுவதிகள் மற்றும் பிரதேச மக்கள் கலந்து கொண்டனர்.

# திருகோணமலைக் கல்வி வலயத்தின் அகில இலங்கை தமிழ் மொழித் தினம்



**(அ . அச்சுதன்)**

இன்று (30) திருகோணமலை பெருந்தெரு விக்னேஸ்வரா மகா வித்தியாலயத்தில் வலயக்கல்விப் பணிப்பாளர் சிவானந்தம் சிறீதரன் அவர்களது தலைமையில் திருகோணமலைக் கல்வி வலய 2022 ஆம் வருடத்திற்கான அகில இலங்கை தமிழ் மொழித் தினம் நடைபெற்றது. இரு கட்டங்களாக நடைபெற்ற குறித்த நிகழ்வின் ஆரம்ப கட்டமாக வலய மட்டத்தால் நடாத்தப்பட்ட எழுத்தாக்கப் போட்டியில் பங்கு பற்றி வெற்றியீட்டிய மாணவர்களுக்கு வலயக்கல்விப் பணிப்பாளர் அவர்களது தலைமையில் சான்றிதழ்களும், பதக்கங்களும் வழங்கப்பட்டிருந்ததுடன் அதனைத் தொடர்ந்து ஏனைய கலை, கலாசாரப் போட்டி நிகழ்ச்சிகளும் நடைபெற்றது.

குறித்த நிகழ்வின் இரண்டாம் கட்டமாக இன்று நடைபெற்ற கலை, கலாசாரப் போட்டி நிகழ்ச்சிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு சான்றிதழ்களும், பதக்கங்களும் வழங்கும் நிகழ்வானது ஈழத்துப் பிரபல தமிழ்ப் பேச்சாளர் திருமதி. திலகவதி ஹரிதாஸ் அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு நடைபெற்றது. குறித்த நிகழ்விற்கு அலுவலக பிரதி மற்றும் உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், சேவைக்கால ஆசிரியர் ஆலோசகர்கள் மற்றும் வலயத்தின்கீழ் மூன்று கல்விக் கோட்டங்களிலும் உள்ள பாடசாலைகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட மாணவர்களும் மற்றும் ஆசிரியர்களும், பெற்றோர்களும் கலந்துகொண்டு நிகழ்வினைச் சிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சர்வதேச தினம்



**க.ருத்திரன்**

மட்டக்களப்பு தண்ணாமுனை மியானி கேட்போர் கூடத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவாகளின் சர்வதேச தினம் இன்று செவ்வாய் கிழமை (30)நினைவு கூறப்பட்டது. குறித்த நிகழ்வானது அகம் மனிதாபிமான வள நிலையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டது. இதன்போது உள்நாட்டு மற்றும் சர்வதேச பொறிமுறையின் கீழ் இலங்கையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் சம காலத்தில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் சவால்கள் தொடர்பாக கிழக்கு மாகாண இளைஞர்களுடன் கலந்துரையாடப்பட்டது. இதில் குறிப்பாக காணாமல் ஆக்கப்பட்டோர்களின் சமவாயம்,இலங்கையில் அவர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள்,சவால்கள்,மற்றும் இளைஞர்கள் காணாமல் ஆக்கப்பட்டோரது விடயத்தில் நீதிக்காக எவ்வாறு பங்களிப்பு செய்யலாம் என்பன தொடர்பான விடயங்கள் கலந்துரையாடப்பட்டது. சட்டத்தரணி செல்வி,பிரசதந்தினி உதயகுமார்,மனித உரிமை ஆணைக்குழுவின் மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய இணைப்பாளர் ஏ.எல்,இஸை தீன்,மற்றும் வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் இணைப்பாளர் க.லவகுகராசா,ஆகியோர்கள் கலந்து கொண்டு விரிவுரையாற்றியதுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டனர்.

# மக்கள் மன்றம் மூலம் பிரச்சினைகளுக்கு தீர்வு



**பொன்ஆனந்தம்**

பிரதேச சபை, நிருவாகிகள், அதிகாரிகள், சிவில்,பிரதிநிதிகள் இணைந்து நடத்திய இன்றய மக்கள் மன்றம் மூலம் பல பிரச்சனைகள் தீர்க்க சந்தர்பம் ஏற்பட்டது இது போன்ற மக்கள் மன்றங்கள் எமது மாவட்டத்தில் உள்ள சகல உள்ளூராட்சி சபைகளிலும் நடாத்தப்பட வேண்டும் என திருகோணமலை பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் எஸ். பார்த்தீபன் தெரிவித்தார். மூதூர் பிரதேச செயலக மண்டபத்தில் பிரதேச செயலாளர் எம். முபாரக் தலைமையில் நடந்த மக்கள் மன்றம் நிகழ்வு நிகழ்வில் கலந்து கொண்டு பேசியபோதே மேற்படி கருத்தினை தெரிவித்தார். "பங்குபற்றுதலுடனும் ,பொறுப்பேற்றலுடனுமான உள்ளூர் ஆளுகையை மேம்படுத்தல் " எனும் தொணிப் பொருளின் கீழ் கிராம மக்களின் பிரச்சினைகளை வெளிப்படுத்தி தீர்வுகளை பெற்றுக் கொடுக்கும் வகையிலான "மக்கள் மன்றம்" இடம்பெற்றது. இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனத்தின் ஏற்பாட்டில் ஏசியன் பவுண்டேசன் அமைப்பின் நிதி அனுசரணையில் இச்செயலமர்மானது மூதூர் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இன்று செவ்வாய்கிழமை (30) இடம்பெற்றது.

இதில் கிராம அபிவிருத்தி சங்கத்தினர், மாதர் அமைப்பினர், இளைஞர்கள்,யுவதிகள், மூதூர் பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ,துறைசார்ந்த உத்தியோகத்தர்கள் ,பிரதேச சபை உறுப்பினர்கள் என 140 பேர் பங்குபற்றியிருந்தனர்.

இதன்போது கிராம மக்கள் எதிர் நோக்கும் காணிப்பிரச்சினை, போதைவஷ்து, சிறுவர் துஷ்பிரயோகம் சார்ந்த பிரச்சினைகள் ,வடிகாண் பிரச்சினை, எரிபொருள் பிரச்சினை உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பாக சமூகமட்ட பிரதிநிதிகளால் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு பின்னர் அதற்கான ஆலோசனைகளும் , வழிகாட்டல்களும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் மூதூர் பிரதேச செயலாளர் எம்.பீ.எம்.முபாறக், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எஸ்.பார்த்தீபன் ,மூதூர் பிரதேச சபையின் செயலாளர் வீ.சத்தியசோதி, மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர், இளைஞர் அபிவிருத்தி அகத்தின் இணைப்பாளர் பொன். சற்சிவானந்தம் ,மூதூர் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் பீ.அறபாத் ,சம்பூர், மூதூர் பொலிஸ் நிலையப் பொறுதிகாரிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சேருவிலைக்கு இடருதவி



**(அ . அச்சுதன்)**

திருகோணமலை மாவட்டம், சேருவில பிரதேச செயலாளர் பிரிவில் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கித் தவிக்கும் வறிய குடும்பங்களுக்குத் திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கம் 300,000.00. ரூபா பெறுமதியான இடருதவியை நேற்று (29) வழங்கியது. திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கத் தலைவர் திரு சண்முகம் குகதாசன் இந்த உதவிகளை வழங்கி வைத்தார்.

# மாளிகைக்காட்டிலிருந்து இருவர் மாவட்டத்தில் முதலிடத்தை பெற்று சாதனை

**நூருல் /ஹதா உமர்**

அம்பாறை மாவட்டம் மாளிகைக்காடு பிரதேசத்தில் இருந்து அண்மையில் வெளியான உயர்தர பெறுபேற்றின் அடிப்படையில் இரு மாணவர்கள் மாவட்டத்தில் முதலிடத்தை பெற்றுள்ளனர். கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியைசேர்ந்தமாணவிஅலியார்நஸீஹாஉயிரியல் தொழிநுட்ப துறையில் மூன்று "ஏ" சித்திகளை பெற்று மாவட்டத்தில் முதலிடத்தையும் தேசிய ரீதியாக ஏழாவது இடத்தையும் பெற்றுள்ளார். மாளிகைக்காடு கமு/ கமு/ அல்– /ஹசைன் வித்தியாலயத்தில் ஆரம்ப கல்வியை கற்ற நஸீஹா உயர்கல்வியை கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியில் கற்றார். இவரது மூத்த சகோதரன் அலியார் நஜிமுதீன் கடந்த காலங்களில் வர்த்தக பிரிவில் அம்பாறை மாவட்டத்தில் இரண்டாம் இடத்தை தக்கவைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேலும் பொறியியல் துறையில் மாளிகைக்காட்டைச் சேர்ந்த முஜிபுர் ரஹ்மான் முஹம்மட் சிமர் மூன்று "ஏ" சித்திகளை பெற்று மாவட்டத்தில் முதலிடத்தையும் தேசிய ரீதியாக நாற்பத்தியேழாவது இடத்தையும் பெற்றுள்ளார். மாளிகைக்காடு கமு/ சபீனா முஸ்லிம் வித்தியாலயத்தில் ஆரம்ப கல்வியை கற்ற முஹம்மட் சிமர் உயர்கல்வியை கல்முனை ஸாஹிரா தேசிய கல்லூரியில் கற்றார். கடந்த சாதாரண தர பரீட்சையிலும் ஒன்பது "ஏ" சித்திகளை பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# காரைதீவில் சாதனை படைத்த மாணவர்களை வீடு தேடிச் சென்று வாழ்த்திய தவிசாளர்

**( காரைதீவு நிருபர் சகா)**

முத்தமிழ்வித்தகர்சுவாமிவிபுலானந்தர்பிறந்த காரைதீவு மண்ணில், இம்முறை க.பொ.த.உயர்தர பரீட்சையில் சாதனை படைத்த மாணவர்களை காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் வீடுதேடிச்சென்று வாழ்த்துக்களை தெரிவித்தார் . காரைதீவு விபுலானந்த மத்திய கல்லூரி வரலாற்றில் அதிகூடிய நான்கு மாணவர்கள் மருத்துவத் துறைக்கும், ஒரு மாணவி பொறியியல் துறைக்கும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.இது விபுலானந்தாவில் வரலாற்றுசாதனையாகும். இவ் வரலாற்று சாதனையை நிகழ்த்திய மாணவர்கள் ,அதிபர், ஆசிரியர்கள் ,பெற்றோர்களுக்கு அவர் நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்தார். மாணவிகளான லோகநாதன் புவித்ரா, சகாதேவராஜா டிவானுஜா, தங்கவடிவேல் டயானு ஆகியோர் 3 ஏ சித்திகளையும், ராஜேஸ்வரன் கம்ஷாயினி இரண்டு ஏ ஒரு பி சித்திகளையும் பெற்று மருத்துவத்துறைக்கு தெரிவாகியுள்ளனர். இதேவேளை ரஜிநாதன் துர்க்கா மூன்று ஏ சித்திகள் பெற்று பொறியியல் துறைக்கு தெரிவாகியுள்ளார். இந்த ஐந்து சாதனை மாணவிகளின் வீடுகளுக்குச் சென்ற தவிசாளர் ஜெயசிறில், நிதி அன்பளிப்பையும் வாழ்த்துக்களையும் வழங்கினார். கூடவே ஆலோசகர் வி.ரி. சகாதேவராஜாவும் சமுகமளித்திருந்தார். சாதனை மாணவர்களின் பெற்றோர் இவ்வாறு வீடு தேடி வந்து வாழ்த்தி ஊக்கப்படுத்தியமைக்காக தவிசாளருக்கும், ஆலோசகருக்கும் நன்றி தெரிவித்தனர். அங்கு தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் கருத்து தெரிவிக்கையில்.. எமது விபுல மண்ணுக்கு பெருமை சேர்த்த கல்விச் சாதனையாளர்களை பாராட்டுவதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். அதுவும் வரலாற்றில் நான்கு மாணவர்கள் ஒரே தடவையில் மருத்துவத் துறைக்கு தெரிவாகியமை பாராட்டுக்குரியது. பொதுவாக சமய சமூக செயற்பாடுகளில் முன்னணியில் செயற்படும் பிரமுகர்களின் பிள்ளைகளே இச் சாதனைகளைபுரிந்துள்ளனர். மக்கள்சேவைகள் என்றும் நல்லதையே தரும் என்பதற்கு இது நல்ல சான்று. மீண்டும் காரைதீவுக்கு பெருமை சேர்த்த மாணவர்கள் அதற்கு உறுதுணையாக இருந்த அனைவரையும் இம்மண்ணின் தலைவர் என்ற முறையில் நன்றியுடன் பாராட்டுகிறேன். என்றார். இதற்கு முன்னர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பியசேன காரைதீவில் இலங்கை கல்வி நிருவாக சேவை பரீட்சையில் சித்தி பெற்று தெரிவான சோ.ஸ/ரநுதன் மு.தர்சிகா நே.வரணியா ஆகியோரின் வீடுகளுக்குச் சென்று பரிசு வழங்கி பாராட்டினார்.



# கல்முனை மாநகர சபையின் 2022ஆம் ஆண்டுக்கான 53 ஆவது சபை அமர்வு

**பாறுக் ஷிஹான்**



கல்முனை மாநகர சபையின் 2022ஆம் ஆண்டுக்கான 53 ஆவது சபை அமர்வு மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தலைமையில் சபையின் சபா மண்டபத்தில் இடம்பெற்றது. திங்கட்கிழமை (29) மாலை இடம்பெற்ற இச்சபை அமர்வின் போது முதலில் சமய ஆராதனை நடைபெற்றது.

தொடர்ந்து கடந்த 2022.07.27 அன்றைய திகதி கூட்டறிக்கையை உறுதிப்படுத்தல், முதல்வரின் உரை,முதல்வரின் ஏனைய அறிவித்தல்கள் என்பன நடைபெற்றன. அத்துடன் உறுப்பினர்களினால் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கப்பட்டதுடன் பின்னர் முதல்வரின் ஏனைய அறிவுறுத்தலுடன் கூட்டம் நிறைவடைந்தமை குறிப்பிடத்தக்கது.

# மாணவர்கள் நல்லவற்றைத் தேர்ந்தெடுங்கள்



**(ரக்ஸனா)**

நாட்டின் தலைவர்களாக வரக் கூடிய வாய்ப்பைப் பெற்றுள்ள மாணவர்கள் நல்லவற்றைத் தேர்ந்தெடுங்கள்"ஏறாவூர் நகர சபைத் தலைவர் நழிம்.

நாட்டின் தலைவர்களாக வரக் கூடிய வாய்ப்பைப் பெற்றுள்ள மாணவர்களாகிய நீங்கள் நல்லவற்றைத் தேர்ந்தெடுத்து அதன் வழி நடக்கப் பழகுங்கள்" என ஏறாவூர் நகர சபையின் தலைவர் எம்.எஸ். நழிம் தெரிவித்தார். ஏறாவூர் நகர சபையின் 53வது மாதாந்த அமர்வு நகர சபை அலுவலக மண்டபத்தில் திங்கள்கிழமை 29.08.2022 இடம்பெற்றது.

அங்கு மாதாந்த அமர்வைப் பார்வையிட ஏறாவூர் ஸாஹிர் மௌலானா வித்தியாலயம் மற்றும் ஏறாவூர் மிச்நகர் இல்மா வித்தியாலயம் ஆகியவற்றின் மாணவர் கழக மாணவர்கள் வந்திருந்தனர். அங்கு சிரேஷ்ட மாணவர் கழக உறுப்பினர்களை விளித்து உரையாற்றும்போது நகர சபைத் தலைவர் நழிம் இந்தக் கருத்தை வெளியிட்டார். அங்கு மேலும் கருத்துத் தெரிவித்த நகர சபைத் தலைவர் நழிம், "இந்தப் பிரதேசத்திற்கு தலைமை தாங்கக் கூடிய அடுத்த தலைவர்கள் நீங்கள்தான், இங்கிருக்கும் உங்களில் பலர் எதிர்காலத்தில் பல்வேறு துறைசார்ந்தவர்களாக வரக் கூடும், அதிலே பொறியியலாளர்களாக, வைத்தியர்களாக, கணக்காளர்களாக, நகர சபை மாகாண சபை உறுப்பினர்களாக, தவிசாளராக, நாடாளுமன்ற உறுப்பினர்களாக நிருவாகத்துறை அதிகாரிகளாக வரக் கூடியவர்கள் உங்களில் பலர் இருக்கலாம்.

அப்படிப்பட்ட தகுதியைக் கொண்டிருக்கும் நீங்கள் ஆசிரியர்களுக்கும் பெற்றோருக்கும் வழிப்பட்டு நடந்து கல்வியின் உயரிய இலக்கை அடைந்து கொள்ள வேண்டும். இப்பொழுது இந்த நாட்டில் தலைவிரித்தாடிக் கொண்டிருக்கும் போதை வஸ்துவுக்கோ அல்லது சமூக விரோதச் செயல்கள் பக்கமோ உங்கள் கவனத்தைத் திருப்பிக் கொள்ளக் கூடாது. அது உங்களையும் இந்த நாட்டையும் அழிவுப் பாதைக்கே இட்டுச் செல்லும்" என்றார்.

# நான் தமிழன் என்று ஒரு வெறுப்புப் பேச்சைக் கூட முஸ்லிம்கள் பேசியதில்லை



**(ரக்ஸனா)**

நான் தமிழன் என்று ஒரு வெறுப்புப் பேச்சைக் கூட முஸ்லிம்கள் பேசியதில்லை. அஞ்சல் அலுவலரின் பிரியாவிடை வைபவத்தில் உருக்கம் ஏறாவூர் நகர அஞ்சல் அலுவலர் கந்தையா கஜேந்திரன் தனது அஞ்சல் அலுவலக உதவியாளர் என்ற பதவியில் 29 வருடங்கள் கடமை புரிந்த நிலையில் ஓய்வு பெற்றுச் செல்வதையொட்டி அவருக்கு சக அலுவலர்களால் பிரியாவிடை வைபவம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஏறாவூர் தபால் நிலைய பொறுப்பு அஞ்சல் அதிபர் எஸ்.எச்.எம். கஸ்ஸாலி தலைமையில் திங்கள்கிழமை 29.08.2022 பிரியாவிடை வைபவம் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு அஞ்சல் பயிற்சிக் கல்லூரியின் போதனாசிரியை கே. பாத்திமா ஹஸ்னா, செங்கலடி தபால் நிலைய பொறுப்பு அஞ்சல் அதிபர் ஏ.எல்.எம். றியாழ், தபாலதிபர் பி. நிறோஷன் உட்பட பிரதேச தபாலதிபர்கள் ஓய்வு நிலை தபாலதிபர்கள் அஞ்சல் அலுவலக அலுவலர்கள் ஆகியயோரும் கலந்து கொண்டனர். நிகழ்வில் பிரியாவிடை பெற்றுச் செல்லும் அஞ்சல் அலுவலக உதவியாளர் கஜேந்திரன் உரையாற்றுகையில், கடந்த 29 வருட எனது சேவைக் காலத்தில் எத்தனையோ கசப்பான இன வன்முறைகள் இடம்பெற்றன. இது எந்தப் பொறுமைசாலியும் பொறுமையிழக்கும் ஒரு கால கட்டமாக இருந்தது. ஆயினும் இந்தத் துயரமான காலப்பகுதியில் ஏறாவூர் அஞ்சல் அலுவலகத்தில் கடமையாற்றும் எனது அதிகாரிகள் சக அலுவலர்கள் சேவை பெற்ற பொதுமக்கள் எவரும் என்னை வெறுத்து நான் தமிழன் என்று ஒரு வெறுப்புப் பேச்சைக் கூட பேசியதில்லை. உங்களில் ஒரு உறவாக சகோதரனாகவே என்னை பராமரித்தீர்கள். இச்சந்தர்ப்பத்தில் நான் ஓய்வு பெற்றுச் செல்வது ஒரு துயரமாக எனக்குத் தெரியவில்லை. ஆனால், நான் இப்படியான மனித நேய உறவுகளை விட்டுப் பிரிவதுதான் எனக்கு துயரமாக இருக்கிறது" என்றார்.

தனது சேவைக் காலத்தில் கடமை கண்ணியம் நேர்மை பொறுப்புணர்வு அன்பு அகிய பண்புகளோடு கஜேந்திரன் தனது சேவைக்காலத்தில் அரும்பணியாற்றியவர் என மட்டக்களப்பு அஞ்சல் பயிற்சிப் போதனாசிரியர் பாத்திமா ஹஸ்னா உட்பட இன்னாள் முன்னாள் தபாலதிபர்கள், சக ஊழியர்கள் ஆகியோரும் பாராட்டிப் பேசினர்.

# பாமஸ்டன் தோட்டத்திற்கு தனியார் பேருந்து சேவை ஆரம்பம்



**தலவாக்கலை பி.கேதீஸ்**

சங்கராஜா நினைவு அறக்கட்டளை ஊடாக தலவாக்கலை நகரிலிருந்து பாமஸ்டன் தோட்டத்திற்கு தனியார் பேருந்து சேவையொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சுமார் 250 குடும்பங்கள் வாழும் பாமஸ்டன் தோட்டத்தில் பாடசாலை மாணவர்கள் மற்றும் இதர தொழில் துறைகளுக்கு செல்லும் மக்களின் நலன் கருதி இந்த தனியார் பேருந்து சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்கது என பிரதேச மக்கள் சங்கராஜா நினைவு அறக்கட்டளைக்கு தமது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளனர்.

# விபுலானந்தாவில் நான்கு மருத்துவம், ஒரு பொறியியல்

**( காரைதீவு நிருபர் சகா)**

காரைதீவு விபுலானந்தா தேசிய பாடசாலையில் நேற்று வெளியான க.பொ.த.உயர்தரப் பரீட்சை முடிவுகளின்படி 4 மாணவிகள் மருத்துவ துறைக்கும், ஒரு மாணவி பொறியியல் துறைக்கும் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக அதிபர் ம.சுந்தரராஜன் தெரிவித்தார். மாணவிகளான லோகநாதன் புவித்ரா, சகாதேவராஜா டிவானுஜா, தங்கவடிவேல் டயானு ஆகியோர் 3 ஏ சித்திகளையும், ராஜேஸ்வரன் கம்ஷ ாயினி இரண்டு ஏ ஒரு பி சித்திகளையும் பெற்று மருத்துவத்துறைக்கு தெரிவாகி உள்ளார்கள்.

ரஜிநாதன் துர்க்கா மூன்று ஏ சித்திகள் பெற்று பொறியியல் துறைக்கு தெரிவாகியுள்ளார்.

# 'கோவர்த்தனம்' நாவல் வெளியீடு



**( வாஸ் கூஞ்ஞ)**

மன்னார் பெருநிலப் பரப்பில் கால்நடை வளர்ப்போர் தங்கள் கால்நடைகளை மேய்ச்சலுக்காக ஒர் இடத்திலிருந்து இன்னுமொரு இடத்திற்கு கொண்டு சென்று பாதுகாப்பதில் உள்ள பிரச்சனைகள் இதனால் பண்ணையாளர்கள் எதிர்நோக்கும் துன்பங்களை எடுத்துக் கூறும் வகையில் ஸ்ரீலேகா பேரின்பகுமாரின் 'கோவர்த்தனம்' நாவல் வெளியீடு நிகழ்வு இடம்பெற்றது. மன்னார் மாவட்டத்தை கதைக் களமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட ஸ்ரீலேகா பேரின்ப குமார் அவர்களின் 'கோவர்த்தனம்' நாவல் நானாட்டான் சிவராசா இந்து வித்தியாலயத்தில் ஞாயிறு (28.08.2022) மாலை மூன்று மணியளவில் இடம் பெற்றது

மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி அதிபர் எஸ்.இ.றெஜினோல்ட் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக அருட்திரு.தமிழ்நேசன் அடிகளார் நானாட்டான் பிரதேச செயலாளர் மா.ஸ்ரீஸ்கந்த குமார் அவர்களும் சிறப்பு விருந்தினராக நானாட்டான் கோட்டக் கல்வி பணிப்பாளர் ரி.ஜெகநாதன் அவர்களும் கௌரவ விருந்தினர்களாக சிவராசா இந்து வித்தியாலய அதிபர் அமலதாஸன் எஸ்.ஆசைப்பிள்ளை அவர்களும் கலந்து கொண்டார்கள்

மேலும் இந்த நிகழ்வில் ஆசிரியர்கள் மாணவர்கள் நானாட்டான் பிரதேச சபை உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டார்கள் நுலாசிரியர் ஸ்ரீலேகா பேரின்ப குமார் அவர்கள் யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகக் கொண்டவரும் நீண்ட காலம் மன்னார் நானாட்டான் மகாவித்தியாலயத்தில் ஆசிரியையாக பணிபுரிந்தவர்

மன்னார் பெருநிலப் பரப்புப் பிரதேசங்களில் விவசாயத்திற்கு இணையாக கால்நடைகள் வளர்க்கப்படுவதுண்டு அவ்வாறு வளர்க்கப்படும் கால்நடைகளை மேய்ச்சலுக்காக ஒர் இடத்திலிருந்து இன்னுமொரு இடத்திற்கு கொண்டு சென்று பாதுகாப்பதில் இருந்து வரும் பிரச்சனைகள் இதனால் பண்ணையாளர்கள் எதிர்நோக்கும் துன்பங்களை எடுத்துக் கூறும் வகையில் இந்த நாவல் உருவாக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. ஆசிரியை ஸ்ரீலேகா பேரின்ப குமார் அவர்களின் எட்டாவது இலக்கியப் படைப்பு 'கோவர்த்தனம்' என்ற நாவல் என்பது குறிப்பிடத்தக்கது

# கல்முனை, நற்பிட்டிமுனையில் யானைத் தொல்லையைக் கட்டுப்படுத்த நடவடிக்கை



**(அஸ்லம் எஸ்.மௌலானா)**

கல்முனை மற்றும் நற்பிட்டிமுனை பிரதேசங்களில் இரவு நேரங்களில் அதிகரித்துள்ள யானைகளின் தொல்லைகளைக் கட்டுப்படுத்தும் பொருட்டு, மின்னொளி வசதிகளை அதிகரிப்பதற்கு கல்முனை மாநகர சபை தீர்மானித்துள்ளது. கல்முனை மாநகர சபையின் 53ஆவது மாதாந்த பொதுச் சபை அமர்வு திங்கட்கிழமை (29) பிற்பகல், மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது மாநகர சபை உறுப்பினர் சீ.எம்..முபீத் விடுத்த கோரிக்கையையடுத்து, இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அவர் இப்பிரச்சினையை பிரஸ்தாபித்து உரையாற்றுகையில், இரவு நேரங்களில் நற்பிட்டிமுனை பிரதேசத்தினுள் காட்டு யானைகள் பட்டி பட்டியாக திரண்டு வந்து, விவசாய நிலங்களையும் பொது மக்களின் உடைமைகளையும் சேதப்படுத்தி வருகின்றன. ஊருக்குள் அத்துமீறி நுழையும் யானைகளினால் மக்களுக்கு உயிர் அச்சுறுத்தல் ஏற்படுகின்றது.

யானைகளின் தொல்லைகளை கட்டுப்படுத்துவதற்காக இப்பிரதேசத்தில் விசேடமாக மின்னொளி வசதிகள் அதிகரிக்கப்பட வேண்டும். இதற்காக வெளிச்சம் கூடிய மின்குமிழ்கள் அவசரமாக பொருத்தப்பட வேண்டும். அத்துடன் யானைகளை துரத்துவதற்காக பட்டாசுகளை பெற்றுக் கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டுக்கொண்டார். இதையடுத்து குறித்த பிரதேசத்தில் மேலதிக மின்குமிழ்களை பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கத் தீர்மானிக்கப்பட்டது.

அதேவேளை, கல்முனை அஹமட் பஸ ாருக்கு பின்னாலுள்ள பகுதியிலும் யானைகள் ஊடுருவுவதாக சுட்டிக்காட்டிய மாநகர சபை உறுப்பினர் எம்.சிவலிங்கம், இப்பகுதியையும் வெளிச்சமூட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென வேண்டுகோள் விடுத்தார். இதையடுத்து குறித்த நடவடிக்கையின்போது இப்பகுதியையும் உள்வாங்குவதென தீர்மானிக்கப்பட்டது.

# விவேகானந்த பாலர் பாடசாலையின் வெள்ளி விழா



**( காரைதீவு நிருபர் சகா)**

மட்டக்களப்பு ராமகிருஷ்ண மிஷன் கல்லடி விவேகானந்தா பாலர் பாடசாலையின் வெள்ளி விழா நிகழ்வு இ.கி.மிசன் ஆச்சிரம பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி தக்ஷயானந்த ஜீ மகராஜ் தலைமையில் நடைபெற்றது . கல்லடி விபுலானந்த மணிமண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இந்த நிகழ்வில் மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வி.வாசுதேவன், மட்டக்களப்பு வலயபிரதிக்கல்விப் பணிப்பாளர் எஸ்.ஹரிகரராஜ்ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள் .

இலங்கை ஸ்ரீ ராமகிருஷ்ணமிஸன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி அக்ஷராத்மானந்தா ஜீ மகராஜ் ஆசியுரை நிகழ்த்தினார். உதவி முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் முன்னிலையில் பாடசாலை அதிபர் திருமதி கு. பிரபாவதி பாடசாலை வரலாறு பற்றி உரையாற்றினார். அதிதிகள் மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர். மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் மேடையேறின.

# கால் புதையும் மண்ணில்

# சிற்கள் புதைந்து செல்லும்

# தேரோட்டம்

## 2022.09.11

## கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலயம்

## காண வாரீர்!



"கல்விக்கு கைகொடுப்போம்"
எல்லாவற்றையும் இழந்து நிற்கும் எமது சமுகத்தை
கல்வியால் மட்டுமே கட்டியெழுப்ப முடியும்
அறிவாலயம்
அறக்கட்டளை நம்பிக்கை நிதியம்
இலங்கை.
ஸ்தாபகர் அலையப்போடி நல்லரெத்தினம்
ARIVALAYAM FOUNDATION TRUST
தலைமைக்காரியாலயம்: பண்டாரியாவெளி, கொக்கட்டிச்சோலை
arivalayam@hotmail.fr +94 77 068 4555 | Sriram : +94 77 652 0206